**எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் காசநோய் புதிய நிதியிடல் மாதிரிக் கூறு - 2020**

---

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் காசநோய் புதிய நிதியிடல் மாதிரிக் கூறின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதார அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. இலங்கையில் காசநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் காசநோய் புதிய நிதியிடல் மாதிரிக் கூறு என பெயரிடப்பட்ட காசநோய் கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 453.69 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 2.9 மில்லியன் தொகையானதுடன் இது எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 சனவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள் கணக்கில் காட்டப்பட்டுள்ள கணக்காய்வுத் தொகைக்கு போதுமான சான்றுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 6.0 | நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள்/ நட்டங்கள் ஆண்டுதோறும் சீராகவே இருந்தன. இது பிரதானமாக கணக்கீட்டு முறைமை காரணமாக இருந்தது. இதற்கு பணப் பெறுமதி காணப்படவில்லை. | எழுத்துமூல சான்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுடன் ஒப்பிடும் போது உலகளாவிய நிதிய நேரடி பணவளிப்பு கணக்கு மீதி மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கணக்கு மீதி தொடர்பான கூட்டுமொத்தம் வேறுபட்டுள்ளது. | 3.2 | இணங்கவில்லை. முரண்பாட்டை எங்களால் பதிவு செய்ய முடியவில்லை, மேலும் கணக்காய்விற்கு நாங்கள் வழங்கிய ஆவணங்களில் 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் புள்ளிவிபரங்கள் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பொழிப்பு மற்றும் பெறுமானத்தேய்வு பட்டியல்கள் ஆகியவற்றுடன் தெளிவாக ஒத்துப்போகின்றன. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 756 | ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 31 இல் அல்லது அத்திகதியளவில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட வேண்டும். வெலிசர வைத்தியசாலை, நாடளாவிய ரீதியில் உள்ள மார்பு சிகிச்சை நிலையங்கள் மற்றும் ஏனைய சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 549 மில்லியன் பெறுமதியான சரக்கிருப்பு உருப்படிகளை சரிபார்ப்பதற்கு | சொத்து மெய்மையாய்வு பாதீட்டு செயற்பாட்டு வரிசை உலகளாவிய நிதியத்தால் அங்கீகரிக்கப்படவில்லை, எனவே மெய்மையாய்வு நோக்கங்களுக்காக சுட்டிக்காட்டப்பட்ட பணியைச் செய்வதற்கு உலகளாவிய நிதியத்தின் நிதிகள் எங்களிடம் காணப்படவில்லை. இந்த நடவடிக்கைக்கான நிதி கோரப்பட்டது, ஆனால் உலகளாவிய நிதியத்தால் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்துடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | எனினும், செயற்பாட்டு நடவடிக்கையை சிறப்பாக அமுல்ப்படுத்துவதற்காக எச்ஜவி மானியத்துடன் வருடாந்த சொத்து மெய்மையாய்வை நடாத்துவதை செயற்திட்ட அலுவலகம் தெரிவு செய்தது. | |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும், எனினும் மீளாய்வாண்டில் ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது, கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக பூர்த்தி செய்ய வேண்டிய பல தேவைப்பாடுகள் இருந்தன. எனினும், பெரும்பாலான கலந்துரையாடல்கள் ஒன்லைனில் நடாத்தப்பட்டன, மேலும் முன்னேற்றம் மாதாந்த அடிப்படையில் கண்காணிக்கப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். |
| (இ) | நிதி அமைச்சால் வழங்கப்பட்ட 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/ 2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிதியாண்டின் இறுதியில் இருந்து இரண்டு மாதங்களுக்குள் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 02 வருட தாமதத்தினால் 2023 சனவரி 13 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | இது பிரதானமாக வழிகாட்டல்களில் ஏற்பட்ட மாற்றங்களால் ஏற்பட்டது. PIU ஆரம்பத்தில் வெளியக கணக்காய்வாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஒரே நிதிக்கூற்றுக்களை தயாரித்தது. எனினும், 2019 முதல் நிதிப் பிரிவு இரண்டுக்கும் தனித்தனி கணக்குகளை உருவாக்க வேண்டும். மேலும் அரசாங்க கணக்காய்விற்காக நியமிக்கப்பட்ட ஒரே மாதிரியான கணக்குகளை உருவாக்க முடியும் என PIU நிதியானது கருதுகிறது. எனினும், பல பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், 2022 திசெம்பரில் சுகாதார அமைச்சில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் இரண்டு வெவ்வேறு கணக்குத் தொகுப்புகளைத் தயாரிப்பதற்கு இறுதியாக ஒப்புக்கொள்ளப்பட்டது. பணியாளர்களின் குழப்பம் மற்றும் அதிகப்படியான பணிச்சுமை காரணமாக, | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | PIU அலுவலகம் வேலையை அரிதாகவே முகாமை செய்கிறது, மேலும் இந்த வழிகாட்டலை 2023 முதல் பின்பற்றும். | |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு செயற்திட்டப் பணிகளுக்காக 52 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2.5 மில்லியன் தொடர்புடைய பணிகளுக்குப் பயன்படுத்தப்படாமல் நீண்டகாலமாக வைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | விரும்பிய நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது திறைசேரி நிதியிலிருந்து (GOSL) பெறப்பட்ட ரூபா 2.7 மில்லியனில் ரூபா 0.13 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டு பெறப்பட்ட நிதியிலிருந்து 95 சதவீதம் மீண்டும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டது. உள்ளூர் நிதியில் இருந்து வரிகள் மற்றும் பணிக்கொடைகள் மாத்திரமே செலுத்தப்படுவதால் உள்ளூர் நிதிகளிற்கான தேவையை சரியாக இனங்காணாமல் திறைசேரி நிதிகள் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. நாங்கள் VOTE 17 ஐ மதிப்பாய்வு செய்ததுடன் GOSL இடமிருந்து நிதி கோரியுள்ளோம், எனினும், உண்மையான செலவின நிதி முதலில் பரிந்துரைக்கப்பட்ட தொகையை விட குறைவாக இருந்தது. திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில் பெரும்பாலானவையை பூர்த்தி செய்ய முடியவில்லை, மேலும் வரிக் கொடுப்பனவு நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் அமைச்சிற்கு திரும்ப வழங்கப்பட்டன. இதன் விளைவாக, மேலும் தவறான நிர்வாகத்தைத் தடுப்பதற்கு PIU பொறுப்பாகும். | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் உரிய காலத்தில் நடாத்தப்பட்டு, விரும்பிய நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மாத்தறை மாவட்ட அலுவலகத்தில் 7 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 219,750 வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் 3 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே அமுல்ப்படுத்தப்பட்டு ரூபா 116,200 மீளச் செலுத்தப்பட்டுள்ளது. | இணங்கப்பட்டது. இணங்கியவரிற்கு சமர்பிக்கப்பட்ட மேலும் தெளிவுபடுத்தல் கடிதத்திற்கான கோரிக்கை, பிராந்தியம் | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் உரிய காலத்தில் நடாத்தப்பட்டு, விரும்பிய நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு தேவையான |

| | | |
|---|---|---|
| | மற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மேலும் தெளிவுபடுத்தல் கடிதத்திற்கான கோரிக்கை, பிரதி இணைக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| காசநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டமானது 2020 யூலை 27 முதல் 2020 ஆகஸ்ட் 01 வரை சுகாதார அமைச்சினால் பணிக்கமர்த்தப்பட்ட 39 உத்தியோகத்தர்களுக்கான 06-நாள் தையல்காரர் அடிப்படை கற்கைநெறி (GIS மற்றும் விண்ணப்பம்) பயிற்சி செயலமர்வை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்பு விஞ்ஞான நிறுவனத்தில் நடாத்தியது. அதேநேரம், ரூபா 1.4 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் வருகையை உறுதிப்படுத்துவதற்காக வருகை தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டத்தின் சான்று ஆவணங்களில் ஒரு பங்கேற்பாளர் குழு அறிக்கை சேர்க்கப்பட்டுள்ளது. உரிய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டவுடன் வருகைப் பட்டியலைத் தருவோம். ஆவணத்தைப் பெறும்போதெல்லாம் கணக்காய்வுடன் பகிர்ந்து கொள்வோம். | எழுத்துமூல சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |